**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 1 COURT, NAMAKKAL.**

**STCNo.1637/2022**

**PW - 2**

| | | |
|---|---|---|
| **PW.2 Cross** | மாணிக்கம் த/பெ.ஆறுமுகம் | 23.09.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the Date: 23.09.2024

**(எதிரி ஆஜர். இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களும் ஆஜர்)**

எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 145(2) NI Act–ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு CMP.No.7749/2023–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் சாட்சியை அழைக்கப்பட்டு செய்யப்படும் குறுக்கு விசாரணை –

**விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 12.39 மணி**

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :–**

1) புகார்தாரர் மற்றும் எதிரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார்தாராரிடம் எதிரி எவ்வளவு தொகை தேவை என்று கடன் கேட்டார் என்றால் ரூ.10 லட்சம் கேட்டார். அவ்வாறு கேட்கும்போது எவ்வளவு தொகை கொடுத்தார் என்றால் ரூ.10 லட்சத்தையும் ஒரேதொகையாக கொடுத்தார். ரூ.10 லட்சம் தொகை கொடுக்கும் சமயத்தில் நான் இருந்தேனா என்றால் ஆமாம். ரூ.10 லட்சம் தொகையானது என்ன வகையான ரூபாய் தாள்களாக கொடுக்கப்பட்டது என்றால் ரூ.500 ரூபாய் தாள்ககளாக கொடுக்கப்பட்டது. ரூ.10 லட்சம் தொகை எதிரி புகார்தாரரிடம் இருந்து பெற்றதாக சொல்லும் தொகையை திருப்பி கொடுக்கவில்லை என்று இந்த வழக்கின் புகார் தாக்கல் செய்வதற்கு முன்னர் புகார்தரார் வேறு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு புகார்தாரர் தாக்கல் செய்துள்ள மனு, பிரமாண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பில் எனது முன்னிலையில் எதிரியிடம் பணம் கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றாலும், தற்போது புகார்தாரரின் நண்பர் என்ற அடிப்படையில் புகார்தாரருக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

(விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 12.45 மணி )